අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

## ஊடக அறிவித்தல்

## இலங்கை பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை - 2026

## பாடசாலை, தனிப்பட்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பம் கோரல்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை - 2026 பரீட்சைக்குத் தோற்றுவதற்கான விண்ணப்பங்கள் 24.03.2026 தொடக்கம் 24.04.2026 வரை நிகழ்நிலையில் (Online) கோரப்பட்டுள்ளன என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

அதற்கமைய சகல பரீட்சார்த்திகளும் நிகழ்நிலையில் (Online) மட்டுமே இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளங்களான www.doenets.lk அல்லது www.onlineexams.gov.lk/eic இற்குப் பிரவேசித்து, உரிய அறிவுறுத்தல்களை நன்கு வாசித்து அதற்கமைய சரியாக நிகழ்நிலையில் (Online) விண்ணப்பித்தல் வேண்டும்.

மேற்குறித்த பரீட்சைக்காக அரசு மற்றும் அரசினால் அனுமதிக்கப்பட்ட பாடசாலைகளிலுள்ள மாணவர்கள் தாம் கல்வி பயிலும் பாடசாலை அதிபர் ஊடாகவும், தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தனிப்பட்ட முறையிலும் விண்ணப்பித்தல் வேண்டும்.

அரசு மற்றும் அரசினால் அனுமதிக்கப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பயனர் பெயர் (User Name), கடவுச்சொல் (Password) ஆகியவற்றைப் பயன்படுத்தி விண்ணப்பிப்பதுடன், தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தமது தேசிய அடையாள அட்டை எண்ணைப் பயன்படுத்தி விண்ணப்பித்தல் வேண்டும்.

பாடசாலைப் பரீட்சார்த்திகளின் விண்ணப்பப்படிவங்கள் அதிபர் ஊடாகவும், தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தனிப்பட்ட முறையிலும் சமர்ப்பிக்கப்படுவதுடன், தேவையான சந்தர்ப்பத்தின் போது சமர்ப்பிப்பதற்காக அதன் அச்சுப் பிரதியொன்றைப் பெற்று தமது பொறுப்பில் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும்.

**விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியானது நீடிக்கப்படமாட்டாது என்பதையும் உரிய திகதிக்கு முன்னர் பரீட்சைக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு மேலும் அறியத்தருகின்றேன்.**

இது தொடர்பாக ஏதேனும் விசாரணை இருப்பின் பின்வரும் தொலைபேசி எண்கள் அல்லது மின்னஞ்சல் ஊடாகத் தொடர்பு கொள்ள முடியும்.

| | |
|---|---|
| நேரடி அழைப்பு எண் | - 1911 |
| தொலைபேசி எண்கள் | - 0112785922, 0112784208, 0112784537, 0112786616 |
| தொலைநகல் எண் | - 0112784422 |
| மின்னஞ்சல் முகவரி | - gcealexam@gmail.com |

ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே
பரீட்சை ஆணையாளர் நாயகம்